**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை - 2022**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் மற்றும் அதன் நிர்வகிப்பவைகளின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை வெளிப்படுத்தவில்லை. இவ் அறிக்கையில் 1.5 பந்தியில் கலந்துரையாடிய விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படை வழங்குவதற்கு போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழான இந்த பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமத்துடன் தொடர்பும் இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 32 இன் பிரகாரம் நியமத்தில் இடமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு மீதிகள் பிரதியீடு செய்து நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படக்கூடாது எனினும், சபையின் முல்ஹல்கலே தோட்டத் | முல்ஹல்கலே தோட்டத் தொகுதி தொடர்பாக காணப்படுகின்ற ஐந்தொகையில் செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதியென வரவு பெறுமதியொன்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், அந்த மீதிகள் தொடர்பாக தகவல்கள் நிறுவனத்திடம் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மீதிகளை இனங்கண்டு சரி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகுதியின் பணிக்கொடைக் கணக்கில் ரூபா 1,067,176 இற்கான ஆரம்ப வரவு மீதியை இனங்காணாமல் மொத்த செலுத்த வேண்டிய பணிக்கொடையிலிருந்து கழித்திருந்தமையால் சபையின் செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதி அந்த பெறுமதியினால் குறை கணிப்பு ஏற்பட்டுள்ளது. | காணப்படவில்லை. அதன் காரணமாக அந்த மீதி 2024 ஆண்டிற்கான ஐந்தொகையில் அந்த மீதியை தனியாக சுட்டிக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பந்தி 06 இன் பிரகாரம் சேதனப் பசளை உற்பத்திச் செயற்திட்டம் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியளவில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 11,832,543 தொகை செலவு ஒன்றென இனங்காணாமல் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | தோட்டத் தொகுதிகளில் மீதியாக காணப்படும் சேதனப் பசளை இருப்பு தற்போது பௌதீக ரீதியாக காணப்படாததுடன், அப்போதைய நிர்வாக அதிகாரியின் அறிவுரையின் மீது அந்த இருப்புக்கள் குறிப்பிட்ட தோட்டத்தில் முதிர்வடையாத பயிர்ச் செய்கைகளுக்கு போடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்த சேதனப் பசளை உற்பத்திச் செயற்திட்டம் தொடர்பான கிரயத்தை நடைமுறை வேலையிலிருந்து அகற்றி உரிய தோட்டத் தொகுதியின் முதிர்வடையாத பயிர்ச்செய்கை தொடர்பாக மூலதனப்படுத்துவதற்கு தோட்டங்களுக்கு அறிவுரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்கள் என இனங்காண முடியாத மற்றும் பௌதீக ரீதியாக காணப்படாத சேதனப் பசளையின் பெறுமதியை மூலதனப்படுத்தக்கூடாது. |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பந்தி 51 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கழிவுத்துண்டுப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் குறைந்த அளவு அனைத்து நிதி ஆண்டுகளிலும் மீளாய்வு செய்து மீண்டும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்படுகின்ற முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட ரூபா 597,433,175 தொகை கிரயத்தையுடைய ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | இந்தச் சொத்துக்களின் மீதிப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட் காலம் மீண்டும் பெறுமதி மதிப்பீடு பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அந்தக் குழுவிற்காக பெறுமதி மதிப்பீட்டு உத்தியோத்தர் தெரிவு செய்வதற்காக பெறுகை பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அதற்கு போதியளவு காலமொன்று தேவைப்படுகின்றது. அந்த செய்முறை மேற்கொள்ளப்பட்ட பின்னர் குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை பெறுமதி மதிப்பிடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் பந்தி 50 இன் பிரகாரம் சேவை நலன் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை கணிக்கும் போது இயற்கணிய முறையை | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினால் பணிக்கொடை கணித்தல் முன்னர் இருந்து 1983 இன் 12 ஆம் இலக்க | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இயற்கணிய முறையின் படி சேவை நலன்கள் கணித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தி கணித்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஊழியர் ஒருவரின் வருட இறுதியில் பெற்றுக்கொள்ளும் அடிப்படை சம்பளத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு சேவை நலன் கணிக்கப்பட்டிருந்தது. | பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழிற் திணைக்களத்தினால் நிலுவை பணிக்கொடை செலுத்துவது தொடர்பாக அலுவல்கள் மேற்கொள்ளப்படுவது இந்த சட்டத்தின் படியாகும் என குறிப்பிடுகின்றேன். 2024.06.10 திகதி நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது பணிக்கொடை சட்டத்தின் படி செயற்படுதல் சரியானதென குறிப்பிடப்பட்டிருந்தது. | மிகவும் ஆக்கபூர்வமான முறையொன்றாக காணப்படுகின்றமையால் அதன்படி செயற்பட வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 இன் பந்தி 34 இன் பிரகாரம் சபையினால் குத்தகை அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ள 123,856.11 ஹெக்டயர் தொகையினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்காததுடன், சபையினால் நிர்வகிக்கப்படும் 18,716.16 ஹெக்டயர் காணியின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான மொத்தக் காணியின் எண்ணிக்கை 142,592.27 ஹெக்டயர் ஆகும். காணிப்பகுதியின் படி தற்போது காணப்படுகின்ற காணிப் பதிவேட்டை நாளதுவரை ஆக்கப்பட்ட போது 142,572.27 ஹெக்டயர் என சரி செய்யப்பட்டது. மேலும், அறுதியாக இனஙகண்டிருக்கவில்லை குறிப்பிடப்பட்டுள்ள 2,872.48 ஹெக்டயர் காணிப் பிரிவின் படி தற்போது 2,604.75 வரை குறைவடைந்திருந்தது. அதேபோல், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தோட்டங்கள் வரிசை அமைச்சின் ஏற்பாடுகளின் மூலம் நிலஅளவை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், தோட்ட நில அளவை அலுவல்களுக்காக வரிசை அமைச்சின் மூலம் நில அளவைத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டு 07 தோட்டத் தொகுதிகளில் 4,741.95 ஹெக்டயர் நில அளவை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வாடகை ஆதனங்கள் முதலீட்டு ஆதனங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், சபையின் ஏனைய சொத்துக்கள் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 இன் பந்தி 12 இன் பிரகாரம் ரூபா 43,860,677 தொகைக்கான நுகர்வு இனப் பெருக்கச் சொத்துக்களின் பெறுமதி வருடாந்தம் பெறுமதி மதிப்பீடு செய்யாமல் நிரந்தரமாக முன்கொண்டு செல்லப்பட்டு காணப்பட்டது. | 2022, 2023, 2024 ஆண்டுகளின் போது மரங்களின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை வனவள பிரிவினால் பெறப்பட்டுள்ளது. அதன்படி, 2021 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் கணக்கு குறிப்பு முதல் | நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டியதுடன், முற்பணவுக் கிரயம் சொத்துக்களில் இருந்து |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது ரூபா 92,644,464 இற்கான இனவிருத்திச் சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய கிரயம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கண்டறியப்பட்டவாறு 2024 ஆண்டின் போது கணக்குகளின் மூலம் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அகற்றப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 41 இன் பந்தி 54(ஈ) இன் பிரகாரம் ரூபா 8,481,159 தொகைக்கான முதிர்வடைந்த ஏனைய இனவிருத்திச் சொத்துக்களின் உளமையை உறுதிப்படுத்தி பெறுமானத் தேய்வுக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | முதிர்வடைந்த ஏலப் பயிர்ச் செய்கை, முதிர்வடைந்த கராம்புப் பயிர்ச் செய்கை 2015.01.01 திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற மேற்கூறிய பெறுமதிகள் கணக்குகளில் தொடர்ச்சியாக காணப்படுகின்ற போதிலும், அவை பௌதீக ரீதியாக காணப்படவில்லை என தோட்டங்களிலிருந்து அறிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று தோட்ட அத்தியட்சகர்களிடம் பெற்றுக்கொண்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன்படி, இந்தச் சொத்துக்களின் பௌதீக உளமையை உறுதிப்படுத்தி பெறுமானத் தேய்வு கழிப்பதற்கு அல்லது எதிர் காலத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் உளமையை உறுதிப்படுத்தி, அந்தச் சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்வு கழிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நுகர்வுப் பிரிவில் காணப்பட்ட ரூபா 3,180,485 இற்கான இருப்பு மீதியில் அடங்கியுள்ள ரூபா 2,369,453 தொகைக்கான ஆரம்ப தேயிலை இருப்பு பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி பௌதீக ரீதியாக காணப்படாத போதிலும், இருப்பிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 2,369,453 தொகை 2019 இல் காலவதியாகிய தேயிலை இருப்பின் பெறுமதி அல்லாததுடன், அது முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்பட்ட மீதியொன்றாகும். நுகர்வுப் பிரிவினால் இந்த காலவதியாகிய மற்றும் காலவதியாக அண்மித்துள்ள தேயிலை இருப்பை மீண்டும் பயன்படுத்தக் கூடிய நிலைமை இருப்பு என ஆக்குவதற்கு refire செய்முறைக்கு உள்ளாக்குவதற்காக தோட்டங்களுக்கு திருப்பி அனுப்பப்படுவதுடன், அந்த செய்முறைக்கு உள்ளாக்கிய பின்னர் மீண்டும் சபையின் தலைமை அலுவலகத்திற்கு பெறப்பட்டு விற்பனை | பௌதீக ரீதியாக காணப்படாத இருப்புப் பெறுமதியை இனங்கண்டு கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்படுகின்றதென நுகர்வுப் பிரிவினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த இருப்புக்குரிய விலை இந்த கணக்குகளில் சீராக்கல் செய்தல் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அதனை 2024 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 32,762,427 தொகைக்கான உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை இருப்பில் அடங்கியுள்ள 11 தோட்டத் தொகுதிகளுக்குரிய ஆரம்ப மீதி ரூபா 2,761,476 தொகைக்கான தேயிலை இருப்பு மற்றும் தேயிலை கன்று இருப்பு பௌதீக ரீதியாக காணப்படாத போதிலும், நிதிக்கூற்றுக்களில் அடங்கியிருந்தது. | 11 தோட்டத் தொகுதிகளுக்குரிய ரூபா 2,761,476 இற்கான இருப்பு மீதி பௌதீக ரீதியாக காணப்படவில்லை என ஏற்றுக்கொள்கின்றேன். எனினும், இந்த மீதிகளை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு தேவையான உதவித் தகவல்கள் அடங்கிய ஆவணங்கள் நிறுவனத்திடம் காணப்படாமையால் தொடர்ச்சியாக கணக்குகளில் காட்டப்படுகின்றது. நுகர்வுப் பிரிவின் காலவதியாகிய தேயிலை இருப்பு தொடர்பான விரிவான தகவல்கள் பேரேட்டுக் கணக்கு இலக்கம் 54680-Ten என்ற பேரேட்டுக் கணக்கில் அடங்கியுள்ளது. ஆரம்ப மீதியை அகற்றுவதற்கு தேவையான போதிய அளவு சான்றுகள் அல்லது ஆவனங்கள் நிறுவனத்திடம் காணப்படவில்லை என குறிப்பிடுகின்றேன். | பௌதீக ரீதியாக காணப்படாத இருப்புக்களை இனங்கண்டு கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் நிதிக்கூற்றுக்களில் உரித்தாக்கப்பட்ட இனவிருத்திச் சொத்துக்களின் கிரயம் ரூபா 17,925,652 தொகை எனினும், கிரயத்தை மிகைத்து பெறுமானத் தேய்வு கணித்த காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 18,520,206 தொகை ஆக காணப்பட்டமையால் சொத்துக்களின் தேறிய ஏட்டுப் பெறுமதி ரூபா 594,554 இற்கான மறை மீதியொன்று காணப்பட்டது. | இந்தப் பெறுமதி 2016 இற்கு முன்னர் இருந்து காணப்படுவதுடன், கிரயத்தை மிகைத்து பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டுள்ள பெறுமதி தொடர்பாக மீண்டும் ஒருமுறை கண்டறிந்து தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கிரயத்தை மிகைத்து சொத்துக்களின் பெறுமானத் தேய்வு கழித்தலை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஹந்தானை தோட்டத் தொகுதிக்குரிய 01 ஏக்கர் 1.3 பர்சஸில் அமைந்துள்ள தேயிலை தொழிற்சாலை மற்றும் காணி 2001 ஜனவரி மாதம் 01 திகதி முதல் 30 வருடங்களுக்கு இலங்கை | இந்த ஹந்தானை தோட்டத் தொகுதியில் அமைந்துள்ள தேயிலை தொழிற்சாலைக்குரிய குத்தகை தொடர்பான விபரங்கள் எழுத்துமூலம் கணக்குப் பிரிவிற்கு இதுவரை | சபைக்கு அறவீடு செய்யப்பட வேண்டிய குத்தகையை அறுதியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேயிலை சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆரம்பம் முதல் இது வரை 21 வருட காலப் பகுதியினுள் அறவிடப்பட வேண்டிய ரூபா 39,100,000 இற்கான குத்தகை அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன், அந்த பெற வேண்டிய குத்தகை தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | கிடைத்திருக்காததுடன், இது தொடர்பாக உரிய தகவல்கள் காணிப் பிரிவிலிருந்து பெற்றுக்கொண்டு எதிர் காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | பெருந்தோட்ட தொழில் அமைச்சின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற ''தோட்ட அபிவிருத்தி செயற்திட்டம்'' 2010 ஆண்டின் போது முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டத்திற்குரிய கூரைத் தகரங்கள் கொள்வனவு செய்வதற்காக சபையினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 4,136,733 தொகை சபையின் நிதிக்கூற்றுக்களில் ஏனைய பெற வேண்டிய மீதியொன்றென 12 வருடத்திற்கு மிகையான காலம் முதல் முன்கொண்ட வரப்பட்டு காணப்பட்டது. இந்த மீதி மீளளிப்பு செய்யப்பட வேண்டியது எந்த நிறுவத்திலிருந்து என இனங்கண்டிருக்காததுடன், அறவிடப்படல் நிச்சயமற்றுக் காணப்பட்ட போதிலும், அதற்காக ஏற்பாடுகள் ஏதும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் 2010 ஆண்டில் முடிவடைந்திருந்துடன், பெருந்தோட்ட தொழில் அமைச்சின் அனுசரனையுடன் நடைபெற்றிருந்ததுடன், இந்த செயற்திட்டத்தை மேற்கொண்ட நிறுவனத்தினால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு இந்த மீதி அறவிடப்பட வேண்டிய போதிலும், அந்த நிறுவனமும் தற்போது செயற்படாத நிறுவனம் ஒன்றாக இருப்பதனால் இது தொடர்பாக தொடர்ந்தும் விடயங்களை கண்டறிந்த பின்னர் தொடர் நடவடிக்கை எடுப்பேன். மேலும், நிறுவனத்திற்காக அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக் கடன் கொள்கையொன்று தயாரிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய தொகைகளை அறவீடு செய்தல் தொடர்பாக கண்டறிய வேண்டியதுடன், அறிவீடு செய்தல் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் அடங்கியுள்ள ரூபா 1,863,756 இற்கான தொங்கல் கணக்கு மீதியொன்று இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | மீதி ரூபா 1,863,756 இற்கான தலைமை அலுவலகத்தின் தொங்கல் கணக்கின் மீதி 1996 ஆண்டு முதல் காணப்படும் மீதியாக இருப்பதுடன், இது தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை. இது தொடர்பாக தகவல்கள் கண்டறிவதற்கு நிறுவனத்தில் காணப்படாமையால் ஏடுகளிலிருந்து பதிவழித்தல் மேற்கொள்ள முடியாதுள்ளது. | தொங்கல் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | லுல்கந்துர தோட்டத் தொகுதியில் பொருத்துவதற்காக எரிபொருள் தொட்டியொன்று கொள்வனவு செய்வதற்காக வாடிக்கையாளர் ஒருவருக்கு செலுத்தியிருந்த ரூபா 1,614,000 தொகைக்கான முற்பணத் தொகை முற்பணம் என கணக்கீடு செய்யாமல் நடைமுறை வேலை | பௌதீக ரீதியாக இந்த எரிபொருள் தொட்டி மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு இதுவரை கிடைத்திருக்காத போதிலும், அதற்கான மொத்த கிரயத்தில் 60% பகுதியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த | சொத்துக்கள் கொள்வனவு ஒன்றென பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தமை யால் வழங்கப்பட்ட தொகை முற்பணம் என கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எரிபொருள் தொட்டி தற்போது பௌதீக ரீதியாக கிடைத்திருக்காமையால், நடைமுறை வேலையின் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன், அந்த தொட்டியின் வேலை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் குறிப்பிட்ட சொத்துக் கணக்கில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஏ) | ரகதுன்கொட தோட்டத் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சுற்றுலா விடுதி (Eco Tea Garden) நிர்மாண வேலைக்காக செலவிடப்பட்டிருந்த கிரயம் ரூபா 2,775,742 தொகை காணப்பட்ட போதிலும், நடைமுறை வேலைக் கணக்கில் ரூபா 3,644,726 தொகை மூலதனப்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 868,984 தொகையினால் சொத்துக்கள் மிகைக் கணிப்பு ஏற்பட்டிருந்தது. | ரகதுன்கொட Eco Tea Garden சொத்துக் கணக்கு வருமானம் மற்றும் செலவு சீராக்கல்கள் 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, ரூபா 868,984 தொகையென அந்தக் கணக்கு மீதி பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்தச் சொத்துக் கணக்கிலிருந்து 2022 ஆண்டின் வருமானம் மற்றும் செலவு சீராக்கல்களை அகற்றி அந்த சொத்துக் கணக்கில் 2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் கணக்கு மற்றும் வருமானச் செலவுக் கணக்கு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி 2019 ஆண்டு முதல் சபைக்குச் சொந்தமான தலைமை அலுவலகத்தின் தரை மாடியில் 1240.5 சதுரஅடி தரைப் பகுதியொன்றில் அலுவலகம் மற்றும் விற்பனை நிலையமொன்று எதுவித கொடுப்பனவு மற்றும் உடன்படிக்கையொன்று இன்றி நடாத்தப்பட்டிருந்தது. 2019 முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய ரூபா 8,537,096 இற்கான தொகை சபைக்கு பெற வேண்டும் என இனங்கண்டிருந்ததுடன், அந்த தொகையை கணக்கீடு செய்வதற்கு அல்லது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2019 ஆண்டு முதல் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் 1,240.5 சதுரஅடி கட்டிடப் பகுதிக்காக வாடகை அறவீடு செய்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன். அதன்படி, அவர்களுக்கு செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகையினை பதிலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அந்தக் கம்பனி இந்தக் கட்டிட வளாகத்திற்கு வந்த பின்னர் குத்தகை உடன்படிக்கையொன்று கையொப்பமிடுவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் அதனை மேற்கொள்ள முடியவில்லை. எவ்வாறாயினும், அரச பெறுமதி மதிப்பீட்டின் படி குத்தகை அறவீடு செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முறைப் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொள்ளல் மற்றும் பெறுமதி மதிப்பீட்டின் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | ஹந்தான தோட்டத் தொகுதியில் தேயிலை விற்பனை நிலையம் நிர்மாணிக்கும் கிரயத்தினுள் | ஹந்தான தோட்டத் தொகுதியினால் பிழையான முறையில் சொத்துக் கணக்கில் | சொத்துக்கள் மற்றும் செலவுக் கணக்குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அடங்கியுள்ள காவலாளருக்கு செலுத்தியிருந்த ரூபா 1,582,601 இற்கான சம்பளம், வருவாய்ச் செலவு என கணக்கீடு செய்யாமல் சொத்துக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் அந்த எண்ணிக்கையினால் சொத்துக்கள் மிகைக் கணிப்பு ஏற்பட்டிருந்தது. | வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், இதனை 2025 ஆண்டு முதல் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்க வேண்டும். |
| (ஓ) | மொன்தகிரிஸ்தோ தோட்டத் தொகுதி 2003 ஆண்டு முதல் பல்வேறு தரப்பினருக்கு குத்தகைக்கு கொடுத்திருந்ததுடன், இந்த தோட்டத் தொகுதிக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 32,168,955 தொகைக்கான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் இனவிருத்திச் சொத்துக்களின் கிரயம் குத்தகைக்கு வழங்கப்பட்ட ஆதனங்களின் கீழ் பல வருட காலம் முதல் முன்கொண்டு செல்லப்பட்டு காணப்பட்டதுடன், அந்த சொத்துக்களின் உளமையை உறுதிப்படுத்தி உரிய சீராக்கல் மேற்கொள்வதற்கும், பெறுமானத் தேய்வு கழித்து கணக்கீடு செய்வதற்கும் சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மொன்தகிரிஸ்தோ தோட்டத் தொகுதியில் சொத்துக்களுக்குரிய ஆவணங்கள் காணப்படாமையால் இந்த சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு கணிக்கப்படாததுடன், தொடர்ந்தும் இவற்றின் உளமை தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமல் உள்ளது. | சொத்துக்களின் உளமையை உறுதிப்படுத்தி பெறுமானத் தேய்வு கழித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி ரூபா | தொடர்புடைய அறிக்கைகளின் படி பெறுமதி ரூபா | வித்தியாசம் ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் சபைக்கு பெற வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி | 119,318,496 | 97,709,342 | 21,609,154 | இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு பெற வேண்டிய கடன் மீதி ரூபா 119,318,496 தொகை பகுப்பாய்வு செய்து பொழிப்பு செய்து அறிக்கையொன்று எம்மால் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும், அரச கணக்காய்விற்கும் மற்றும் அமைச்சின் கணக்காய்விற்கும் வழங்கப்பட்டதுடன், | பெற வேண்டிய மீதிகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எம்மால் அனுப்பப்பட்ட அறிக்கைக்கு பதிலாக அவர்களின் கணக்கின் படி தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பேரேட்டுக் கணக்குகளின் பிரதிகள் மாத்திரம் இலங்கை அரச பெருந்தோட்டக் சபை எமக்கு அனுப்பியிருந்ததுடன், போதிய தகவல்கள் காணப்படாமையால் அந்தக் கணக்குகளை சான்றுறுதி செய்ய இயலாமல் உள்ளது. எவ்வாறாயினும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் படி இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் பெற வேண்டிய கடன் மீதி ரூபா 119,318,496 தொகையாகும். |

### 1.5.4 அமைப்பு தொடர்ந்தியங்கல்

தொடர்ச்சியாக நட்டமடைதல் காரணமாக 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் தேறிய சொத்துக்கள் மற்றும் தொழிற்படு மூலதனம் முறையே ரூபா 1,224,346,735 தொகை மற்றும் 2,325,555,749 இற்கான மறைப் பெறுமதியொன்றை பெற்றிருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நியதிச் சட்ட கொடுப்பனவு ரூபா 2,276,278,024 தொகையாக காணப்பட்டது. இந்த ஈடுபாட்டுப் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு போதியளவு முதலீடுகள் மேற்கொண்டிருக்காததுடன், தீர்க்க வேண்டிய வண்டிக் கடன் மீதி ரூபா 195,969,195 தொகையாக காணப்பட்டது. அதன்படி, இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 25 இன் பிரகாரம் சபை தொடர்ச்சியாக நிலவுதல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது.

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | சபையின் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மீதியில் அடங்கியுள்ள தலைமை அலுவலகத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் | 1,535,427,939 | ஒப்பீட்டு பரிசோதனை தொடர்பாக காணிகளின் நில அளவைப் படங்கள், வரைபுகள், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள், உரித்தாக்களுக்கான | தலைமை அலுவலகத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ள தலைமை அலுவலத்திற்கு சொந்தமான காணிகள் | காணிகள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய ஆதனங்களின் உளமை பௌதீக ரீதியாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தோட்டத் தொகுதிகளின் கட்டிடங்கள், ஓனுகல்ஓய தோட்டத் தொகுதிக்குரிய நிலையான சொத்துக்கள் மீதிகள் மற்றும் ஏனைய மீதிகள், நீர் வழங்கல் செயற்திட்டத்தின் மீதி, நாகஸ்தன்ன மற்றும் கலபொட தோட்டத் தொகுதியின் சேதனப் பசளை செயற்திட்டத்தில் அடங்கிய பழைய மீதிகள் | | வர்த்தமானிகள் மற்றும் வருடாந்த பௌதீக மெய்மையாய்தல் அறிக்கைகள் | மற்றும் கட்டிடங்கள் ரூபா 1,503,744,550 இல் அடங்கியுள்ள ரூபா 1,489,375,963 இற்கான விரிவான தகவல்கள், 2020 திசெம்பர் 31 திகதில் முடிவடைந்த ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டது. ஏனைய ஆதனங்கள் மற்றும் கட்டிடங்களுக்குரிய விரிவான தகவல்கள் கண்டறிய முடியாதுள்ளது. | பரிசோதனை செய்து சொத்துக்களின் மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இனவிருத்திச் சொத்துக்களில் அடங்கியுள்ள 2015 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படுகின்ற முதிர்வடையாத ஏனைய பயிர்ச் செய்கைகள் மற்றும் 1996 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படுகின்ற முதிர்வடைந்த ஏனைய பயிர்ச் செய்கை மீதிகள் | 14,501,969 | பௌதீக மெய்மையாய்தல் அறிக்கைகள், மரங்களின் புள்ளி விபர அறிக்கைகள் மற்றும் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்வதற்குரிய அறிக்கைகள். | இந்த பெறுமதிகள் 1996 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படுவதுடன், அவ்வவ் காலப் பகுதிகளுக்கு தேவையான தகவல்களை கண்டறிந்து நீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும். | பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சரியான மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | செலுத்த வேண்டிய வியாபார மீதியில் அமைந்துள்ள தொழிற்பாட்டுக் குத்தகை சொத்துக்களுக்கு எதிராக வைப்புக்கள், ஏனைய வைப்புக்கள் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் மீதி | 379,809,047 | மீதிகளை உறுதிப்படுத்தல்கள், வைப்புக்களுக்குரிய பற்றுச் சீட்டுக்கள் மற்றும் காலப் பகுப்பாய்வு | இந்த மீதிகளில் ரூபா 49,603,011 இற்கான மீதி 2015 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படுகின்ற மீதிகளாக இருப்பதுடன், தற்போது நிறுவனத்தின் இந்த மீதிகளுக்குரிய தகவல்களை கண்டறிவதற்கு முடியாமல் உள்ளது. செலுத்த வேண்டிய மீதிகளில் அடங்கியுள்ள ஏனைய வைப்பு மீதிகளாகிய ரூபா 193,755,519 இல் குத்தகையாளர்களிடம் முற்பண முற்கொடுப்பனவு மீதியாக காணப்படுவதுடன், ஏனைய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 120,258,519 உட்பட மீதிகளை உறுதிப்படுத்தி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும். | மீதிகளை உறுதிப்படுத்துவதன் மூலம் சரியான மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை இருப்பு, நுகர்வுப் பிரிவின் பழைய | 108,971,479 | இருப்பு மதிப்பீட்டு அறிக்கைகள், மீதிகளை | 2022 இருப்பு கணிப்பீட்டு அறிக்கை 2024.11.01 திகதி கணக்காய்விற்கு | இருப்புப் பெறுமதியை சரியாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடன்பட்டோர் மீதி, பெற வேண்டிய தடுத்து வைத்தல் வரி மற்றும் பெறுமதி கூட்டிய வரி | | உறுதிப்படுத்தல்கள், கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வு மற்றும் உரிய மூல ஆவணங்கள் | ஒப்படைக்கப்பட்டதுடன், நுகர்வுப் பிரிவின் பழைய கடன்பட்டோர் மீதி ரூபா 4,441,537 இற்கான ஆரம்ப மீதியாக காணப்படுவதுடன், தகவல்கள் நிறுவனத்திடம் காணப்படவில்லை. அதேபோல், பெற வேண்டிய தடுத்து வைத்தல் வரி மற்றும் பெறுமதி கூட்டிய வரி ரூபா 13,512,887 இடையே ரூபா 9,694,535 தொகை தடுத்து வைத்தல் வரி அறவீடு செய்தல் மேற்கொள்ள முடியுமாவது, நிறுவன கம்பனி வருமான வரி செலுத்தும சந்தர்ப்பத்தில் (CIT) ஆக இருந்த போதிலும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை இதுவரை நட்டமடையும் நிறுவனம் ஒன்றாக காணப்டுகின்மையால் நிறுவனம் சார் வரி செலுத்தியிருக்காததுடன், அதன் காரணமாக தடுத்து வைத்தல் வரி அறவீடு செய்ய முடியாதுள்ளது. | கணித்து மீதிகளை உறுதிப்படுத்த வேண்டியதுடன் பதிவேடுகளில் காணப்படாத மீதிகள் சரியாக கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மக்கள் வங்கியில் இருந்து பெற்றிருந்த கடன் தொகை, செலுத்த வேண்டிய வரிப் பொறுப்புகள் (VAT, NBT, ESC), செலுத்த வேண்டிய பதவியணி சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், மாற்றமடையாத பழைய பொது ஒதுக்க மீதி, பெருந்தோட்ட அபிவிருத்தி செயற்திட்ட மீதி, மகாவலி வீடமைப்பு செயற்திட்டத்திற்காக செலுத்த வேண்டிய மீதி | 596,513,479 | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம், கடன் உடன்படிக்கைகள், கடன் செலுத்தும் விபரங்கள், மீதிகளை உறுதிப்படுத்தல்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து கிடைத்த சலுகைக் காலங்கள், நிதியம் கிடைக்கப்பட்ட மூலவளம் மற்றும் அதனை கணக்கீடு செய்வதற்குரிய கொள்கை, மேற்கொள்ளப்பட்ட வேலை அறிக்கை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பில்பத்திரங்கள், காலப் பகுப்பாய்வு மற்றும் உறுதிச் சீட்டுக்கள் | மக்கள் வங்கியிலிருந்து பெற்றிருந்த கடன் தொகை மிகவும் பழைய மீதியொன்றாக காணப்படுவதுடன், இது தொடர்பான தகவல்கள் நிறுவனத்திடம் காணப்படவில்லை. செலுத்த வேண்டிய வரிப் பொறுப்புக்களுக்குரிய மீதி முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்படும் மீதிகளாக இருப்பதுடன், அப்போது நிலவிய நிதி நெருக்கடியின் காரணமாக கொடுப்பனவு செய்ய முடியாமல் போனது. மாற்றமடையாத பழைய பொது ஒதுக்கமீதியில் அடங்கியுள்ள ரூபா 224,486,712 இற்கான மற்றும் ரூபா 55,280,753 இற்கான மற்றும் ரூபா 16,028,738 இற்கான மீதிகள் 2016 முதல் மாற்றமடையாது | ஆவண ரீதியான சான்றுகள் மூலம் மீதிகளை உறுதிப்படுத்தி மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | காணப்படுகின்ற மீதிகளாகும். மகாவலி வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக செலுத்த வேண்டிய மீதி ரூபா 36,310,518 தொகை மகாவலி செயற்திட்டத்திற்காக நீர் மூழ்கடிக்கப்பட்ட வீடுகள் மற்றும் காணிகளை மறுசீரமைப்பதற்காக இந்தப் பணம் மகாவலி அபிவிருத்தி சபையினால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், நிறுவனத்தினால் அந்தப் பணம் குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. | |
| (ஊ) | வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் அடங்கியுள்ள மொன்டகிரிஸ்டோ தோட்டத் தொகுதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி | 40,503,226 | சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மீதிகளின் உளமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான விரிவான தகவல்கள் | இந்த கணக்குகளில் அடங்கியுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக தகவல்கள் காணப்படாமையால் இந்தக் கணக்குகளை சான்றுறுதி செய்ய முடியாதுள்ளது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பௌதீக ரீதியாக இனங்கண்டு மீதிகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் தோட்டத் தொகுதிகளுக்குரிய சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வு அறிக்கையின் படி ரூபா 100,315,563 இற்கான வர்த்தக மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதியில் 05 வருடங்களுக்கு மிகையான ஏனைய கடன்பட்டோர் மீதி ரூபா 59,908,107 தொகை காணப்பட்டதுடன், சபையினால் இந்த மீதியை அறவீடு செய்வதற்காக பொறுத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தோட்டத் தொகுதிகளுக்குரிய இந்த ரூபா 100,315,563 இற்கான வர்த்தக மற்றும் ஏனைய கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வு அறிக்கையின் படி 04 வருடங்களுக்கு மிகையான கடன்பட்டோர் மீதி ரூபா 59,908,107 மீதி உண்மையாகவே பெற வேண்டிய மீதியொன்றா என உறுதிப்பாட்டினை உரிய தோட்டத் தொகுதிகளில் இருந்து பெற்று எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தோட்டத் தொகுதிகளில் பல வருட காலம் நிலவுகின்ற நிலுவை மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தலைமை அலுவலகத்தின் கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வு அறிக்கையின் படி ரூபா 402,730,972 தொகைக்கான பெற வேண்டிய வர்த்தக மீதிகள் 3 – 6 வருடங்களுக்கு இடைப்பட பெற | குத்தகை உடன்படிக்கையின் வழுக்கள் குத்தகையாளர்களுக்கு போலவே கணக்குப் பிரிவிற்கும் முறைப் பிரகாரம் மாதாந்தம், வருடாந்தம் இன்வொயிஸ் பத்திரங்கள் | பல வருட காலம் முதல் நிலவுகின்ற நிலுவை மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய மீதிகள் ரூபா 44,307,866 தொகை, 06 வருடங்களை மிகைத்துள்ள பெற வேண்டிய மீதி ரூபா 53,147,964 தொகை மற்றும் நுகர்வோர் பிரிவில் 03 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 16,461,219 தொகையும் மீளாய்வாண்டளவிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிப் பிரிவினால் வழங்கப்படாமை போன்ற வழுக்களின் காரணமாக கணக்கு மீதிகள் சரியானவை அல்லாமல் காணப்படுவதுடன், அந்த மீதிகள் தற்போது சரி செய்யப்பட்டு வருகின்றது. | |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் செலுத்த வேண்டிய வர்த்தக மீதிகளில் அடங்கியுள்ள ரூபா 133,090,331 தொகைக்கான ஏனைய செலுத்த வேண்டிய கடன் மீதிகளை பல வருட காலம் முதல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த செலுத்த வேண்டிய மீதிகள் 2015 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படுவதுடன், SRMC நிறுவனம் தற்போது செயற்படாத நிறுவனம் ஒன்றாகும். | பல வருட காலம் நிலவுகின்ற மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது முறையான செய்முறையொன்றை கடைபிடித்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தோட்டத் தொகுதிகளின் கடன் கொடுத்தோர் காலப் பகுப்பாய்வின் படி ரூபா 102,707,782 தொகைக்கான கடன் கொடுத்தோர் மீதிகளில் 3 – 5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 7,289,247 தொகை மற்றும் 05 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 75,078,035 இற்கான கடன்கொடுத்தோர் மீதியொன்று தீர்த்திருக்கவில்லை. | தோட்டத் தொகுதிகளில் கடன்பட்டோர் மீதியில் அடங்கியுள்ள 3 – 5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 7,289,247 தொகை மற்றும் 05 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 75,078,035 இற்கான கடன்கொடுத்தோர் மீதிகள் உண்மையாகவே காணப்படுகின்றனவா என கண்டறிந்து தேவையான சரி செய்தல்கள மேற்கொண்டு மற்றும் நிறுவனத்தின் நிதி நிலைமையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோருக்குரிய கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் தலைமை அலுவலகத்திற்குரிய ரூபா 154,246,177 தொகைக்கான வர்த்தக கடன்கொடுத்தோர் மீதியில் 06 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 128,696,631 இற்கான கடன்கொடுத்தோர் மீதியும் 3 – 6 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 2,319,990 இற்கான கடன்கொடுத்தோர் மீதியொன்று தீர்க்கப்படாமல் காணப்பட்டது. | நிறுவனத்தில் நிலவுகின்ற நெருக்கடியான தொழிற்படு மூலதன கட்டுப்பாட்டின் காரணமாக இந்த கடன்கொடுத்தோருக்கு பணம் செலுத்துதல் தாமதமடைந்துள்ளதுடன், பணம் காணப்படுகின்ற அளவில் தற்போது இந்த மீதி செலுத்திச் செல்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோருக்குரிய கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு முறைப் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பகுதி ii இன் உபபிரிவு 5(1) | ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற அல்லது மரணமடைந்த தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 708,580,586 இற்கான செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதியொன்று மற்றும் ரூபா 206,283,256 இற்கான செலுத்த வேண்டிய மிகை விதிப்பு மீதியொன்றும் காணப்பட்டது. | தொடர்ச்சியாக நிறுவனத்தில் நிலவுகின்ற தொழிற்படு மூலதன நிதி நெருக்கடியின் காரணமாக நிறுவனத்தின் ஊழியர் பணிக்கொடைத் தொகை உரிய முறையில் செலுத்துவதற்கு முடியாமல் இருந்ததுடன், தற்போது வழக்குத் தாக்கல் செய்த ஊழியர்களுக்கு 2023 ஆண்டின் அமைச்சரவை பத்திர இலக்கம் 23/0768/616/017 இன் படி மாதாந்தம் கிடைக்கப்பெற்ற ரூபா 30 மில்லியன் தொகையில் மற்றும் தற்போது காணப்படும் காசுப் பாய்ச்சல் மூலம் சேவையை விட்டு விலகிச் சென்றுள்ள மற்றும் செல்கின்ற ஒழுங்கு முறைப்படி பணிக்கொடைத் தொகை செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும் இந்த 2023 அமைச்சவை பத்திரத்தின் மூலம் பணம் பெறுதல் 2025 ஜூன் மாதம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது. | பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடைத் தொகையை உரிய காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மூலம் சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1998 இன் 15 ஆம் இலக்க திருத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவு 15 | 2001 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை ரூபா 1,076,169,148 இற்கான செலுத்த வேண்டிய சேமலாப தொகையும், 2008 ஆண்டு முதல் தோட்ட பதவியணி சேமலாப சங்கத்திற்கு (ESPS) மற்றும் இலங்கை பயிர்ச்செய்கையாளர்களின் சேமலாப சங்கத்திற்கு (CPPS) ரூபா 159,197,542 இற்கான நிலுவை சேமலாப | நிறுவனத்தின் நிலவிய கடின தொழிற்படு மூலதன நிதி நெருக்கடியின் காரணமாக சுமார் 2000 ஆம் ஆண்டு முதல் EPF / ETF தொடர்ச்சியாக செலுத்துவதற்கு முடியாமல் இருந்ததுடன், நிதி அமைச்சின் மூலம் சில ஆண்டுகளில் இந்த நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவுகளுக்காக | சட்டத்தின் பிரகாரம் உரிய தினத்தில் நியதிச் சட்டக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், நீண்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த தொகைகளை தீர்ப்பதற்கும் மற்றும் தவணைகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீதியொன்றும் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றின் படி மேற்கூறிய நிதியத்திற்கு ரூபா 29,465,691 இற்கான செலுத்த வேண்டிய மிகை விதிப்பு செலுத்தியிருக்கவில்லை. | நிதியம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, அந்தப் பணத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டது. மேலும், 2023 ஆண்டின் அமைச்சரவை பத்திர இலக்கம் 23/0768/616/017 படி ரூபா 30 மில்லியன் தொகையொன்று ஒவ்வொரு மாதத்திலும் இந்த நிலுவை நியதிச்சட்ட கொடுப்பனவு செலுத்தப்பட்டு வந்ததுடன், அதன் மூலம் நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவு மீண்டும் செலுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த 2023 அமைச்சரவைப் பத்திரத்தின் படி பணம் கிடைத்தல் 2025 ஜூன் மாதம் முதல் நிறுத்தப்பட்டது. மேலும், 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டத்தின் படி 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் படி 2023 ஜூலை முதல் தற்போதைய நியதிச் சட்ட கொடுப்பனவுகள் நிறுவனத்தின் பணத்தினால் முறைப் பிரகாரம் செலுத்தப்பட்டு வருகின்றது. | உரிய முறையில் செலுத்துவதன் ஊடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும். |
| (இ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் உபபிரிவு 16(1) | 2007 ஆண்டு முதல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 78,168,238 இற்கான பங்களிப்புத் தொகை செலுத்தியிருக்காததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 3,567,176 இற்கான செலுத்த வேண்டிய மிகை விதிப்புத் தொகையொன்று காணப்பட்டது. | நிறுவனத்தின் நிலவிய கடின தொழிற்படு மூலதன நிதி நெருக்கடியின் காரணமாக சுமார் 2000 ஆம் ஆண்டு முதல் EPF / ETF தொடர்ச்சியாக செலுத்துவதற்கு முடியாமல் இருந்ததுடன், நிதி அமைச்சின் மூலம் சில ஆண்டுகளில் இந்த நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவுகளுக்காக நிதியம் வழங்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் உரிய தினத்தில் நியதிச் சட்டக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், நீண்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த தொகைகளை தீர்ப்பதற்கும் மற்றும் தவணைகளை உரிய முறையில் செலுத்துவதன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதன்படி, அந்தப் பணத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டது. மேலும், 2023 ஆண்டின் அமைச்சரவை பத்திர இலக்கம் 23/0768/616/017 படி ரூபா 30 மில்லியன் தொகையொன்று ஒவ்வொரு மாதத்திலும் இந்த நிலுவை நியதிச்சட்ட கொடுப்பனவு செலுத்தப்பட்டு வந்ததுடன், அதன் மூலம் நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவு மீண்டும் செலுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த 2023 அமைச்சரவைப் பத்திரத்தின் படி பணம் கிடைத்தல் 2025 ஜூன் மாதம் முதல் நிறுத்தப்பட்டது. மேலும், 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டத்தின் படி 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் படி 2023 ஜூலை முதல் தற்போதைய நியதிச் சட்ட கொடுப்பனவுகள் நிறுவனத்தின் பணத்தினால் முறைப் பிரகாரம் செலுத்தப்பட்டு வருகின்றது. | ஊடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாயம் சார் கூட்டுத்தாபனச் சட்டம் | சட்டத்திற்கு முரணாக சபையின் மற்றும் தோட்டத் தொகுதிகளில் வருமானத்தில் 0.25 சதவீதம் தொகையொன்று ‘‘தலைவர் நலன்புரி நிதியம்’’ என்ற பெயரில் நிதியம் ஒன்று 2020 ஆண்டில் நிறுவப்பட்டிருந்தது. இந்த நிதியத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,782,654 தொகையொன்று செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த நிதியத்தின் மூலம் ஊழியர் மதிப்பாய்வு பல்வேறு நன்கொடை மற்றும் துவிச்சக்கர வண்டிக் கடன் தவணை செலுத்துவதற்காக ரூபா | 2022 ஆண்டின் போது இந்த நிதியம் ஜனதே வருமானத்தில் 0.25 ஆகிய ரூபா 1,058,243.60 இற்கான தொகை மாத்திரம் செலவு வைக்கப்பட்டது. இந்த செலவு வைத்தல் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், இந்த பணிப்பாளர் சபையின் வரிசை அமைச்சு மற்றும் நிதியமைச்சின் பிரதிநிதித்துவம் காணப்படுவதனால் உரிய | நிதியம் நிறுவுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் போலவே திறைசேரியின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3,323,870 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. இந்த நிதியம் நிறுவுவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என குறிப்பிடுகின்றேன். அதன்படி, முறையான அங்கீகாரம் இன்றி இந்த நிதியம் நிறுவப்பட்டிருந்ததென குறிப்பிட முடியாது என தெரிவிக்கப்படுகின்றது. | |
| (உ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 93 | 2022 / 2023 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய வருமான வரி திரட்டு 2025 ஜூலை 22 திகதி வரை சமர்ப்பித்திருக்காததுடன், காலப் பகுதிக்கான வருமான வரி செலுத்தலும் மேற்கொண்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தாமதமடைந்த காரணத்தினால் வருமான வரி திரட்டுக்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதில் தாமதம் அடைந்திருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் தேவை இதற்கான காரணமாகும். | சட்டத்தின் பிரகாரம் மதிப்பீட்டாண்டிற்குரிய வருமான வரி திரட்டு சமர்ப்பித்து வரி செலுத்துதல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஊ) | 1978 இன் திசெம்பர் 19 ஆம் திகதிய திறைசேரி சுற்றறிக்கை இலக்கம் 842 | சபையின் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டத் தொகுதிகளுக்கு சொந்தமாக காணப்படும் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண மீதிகள் தொடர்பாக சொத்துக்களின் வகை, கொள்வனவு செய்த பெறுமதி மற்றும் திகதி வாகனங்கள் அப்புறப்படுத்தல், வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் அகற்றுதல்கள், மாற்றுதல்கள் மற்றும் ஒவ்வொரு சொத்துக்களில் வெவ்வேறாக இனங்காணக் கூடியவாறு குறிப்பிட்ட தகவல்களை அடக்கிய முறையாக தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று சபையினால் பேணிச் சென்றிருக்கவில்லை. | கணக்கீட்டுத் தேவைப்பாட்டிற்காக நிறுவனத்தினால் தோட்டங்களுக்காக மற்றும் தலைமை அலுவலகத்திற்காக வெவ்வேறாக நிலையான சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் முறையே 1996 ஆண்டு மற்றும் 2008 ஆண்டு முதல் பதிவேடொன்று பேணப்பட்டு வருவதுடன், முறையான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்லல் மேற்கொள்ளப்படவில்லை. எதிர் காலத்தில் சரியான முறையில் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய தகவல்களை அடக்கிய நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்ல வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 20,000,509 இற்கான இலாபமொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 459,399,025

தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 479,399,534 தொகையில் ஒட்டுமொத்த நட்டத்தில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த நட்டம் குறைவதற்காக பிரதானமாக சபையின் தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான உரிய விற்பனை வருமானம் ரூபா 191,947,476 தொகையினால் அதிகாரித்தல் அதற்குரிய விற்பனவுக் கிரயம் ஒட்டுமொத்தமாக ரூபா 382,952,881 இனால் குறைவடைதல் காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் தேயிலை கொழுந்து விற்பனை மூலம் கிடைத்த வருமானம் 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆண்டின் போது 33 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், இறப்பர் பயிர்ச் செய்கைகள் மூலம் கிடைத்த வருமானம் 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆண்டில் 09 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆண்டின் தேயிலைக் கொழுந்து மற்றும் நுகர்வுப் பிரிவின் தேயிலை உற்பத்திக்குரிய கிரயம் முறையே 23 சதவீதத்தினால் குறைவடைதல் மற்றும் 20 சதவீதத்தினால் அதிகரித்தலும் ஏற்பட்டிருந்தது. அதேபோல், இறப்பர் பயிர்ச்செய்கைக்குரிய கிரயம் 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆண்டின் போது 06 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது நடைமுறை விகிதாசாரம் 0.34 : 1 மற்றும் 0.32 : 1 தொகையாக காணப்பட்டது.
- மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது திடீர் சொத்து விகிதாசாரம் 0.30 : 1 மற்றும் 0.29 : 1 தொகையாக காணப்பட்டது.
- மீளாய்வாண்டு மொத்த இலாப வீதாசாரம் 2.8 சதவீதமாக காணப்பட்டதுடன், கடந்த ஆண்டின் போது மொத்த நட்ட வீதாசாரம் 44 சதவீதமாக காணப்பட்டது.
- மீளாய்வாண்டின் போது தேறிய இலாப வீதாசாரம் 1.4 சதவீதமாக காணப்பட்டதுடன், கடந்த ஆண்டின் போது தேறிய நட்ட வீதாசாரம் 38 சதவீதமாக இருந்தது.

சபையின் 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் மேற்கூறிப்பட்ட விகிதாசார பரிசோதனையின் போது நிலவுகின்ற நடைமுறைச் சொத்துக்களின் மூலம் அதன் நடைமுறைப் பொறுப்புக்களை தீர்த்துக்கொள்ளும் இயலுமையொன்று காணப்படவில்லை எனவும் மற்றும் நிறுவனத்தின் உரிமை மூலதனத்தை மிகைத்து கடன் மூலதனம் காணப்படுவதன் ஊடாக நிறுவனத்தில் காணப்படும் நிதி நெருக்கடி மற்றும் தொடந்தியங்கும் ஆபத்து நிலைமை தொடர்பாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி தலைமை அலுவலகத்தின் மற்றும் தோட்டத் தொகுதிகளின் 07 கணக்கீட்டுச் செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்குரிய மென்பொருள் முறைமையொன்றுக்காக தனியார் கம்பனியொன்றுக்கு 2021 ஆண்டு முதல் 2025 ஏப்ரல் 30 திகதி வரை மென்பொருள் நிறுவுதல் மற்றும் மாதாந்த கொடுப்பனவாக ரூபா 13,989,750 தொகை | இது தொடர்பாக கணக்குப் பிரிவினால் ஆளுகை சபைக்கு தொடர்ச்சியாக அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டது. | நிறைவேற்றப்படாத கணக்கீட்டுத் தொழிற்பாடுகளுக்காக செலுத்திய பணம் மீண்டும் அறவீடு செய்யப்பட வேண்டியதுடன், முறைமையில் காணப்படுகின்ற பலவீனங்களின் காரணமாக புதிய முறைமையொன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மென்பொருள் முறைமையின் மூலம் ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல், இருப்புக் கட்டுப்பாடு மற்றும் வருமானம் மற்றும் செலவுக் கட்டுப்பாடு ஆகிய குறிக்கோள்கள் நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் இருந்து. | | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக 2017 ஆண்டில் 17 தோட்டங்களுக்கான Sage மென்பொருள் முறைமை அறிமுகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 826,387 இற்கான தொகை மீளாய்வாண்டு இறுதியளவிலும் முறைமை செயற்படாத காரணத்தினால் அந்தச் செலவு சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக மாறியிருந்தது. | தோட்டத் தொகுதிகளில் இந்த Sage மென்பொருள் பயன்படுத்தல் தற்போது மேற்கொள்ளப்படவில்லை. அதற்காக செலவிடப்பட்டிருந்த செலவினை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவு மேற்கொள்ள முன்னர் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஆக்கபூர்வமான கருமங்களுக்காக மாத்திரம் பணம் செலவிடப்பட வேண்டும். |
| (இ) | ஹன்தான தோட்டத் தொகுதியில் 2019 ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த தற்போது செயற்படு நிலையில் காணப்படாத தேயிலை விற்பனை நிலையத்திற்காக மீளாய்வாண்டு இறுதியளவிலும் ரூபா 3,208,115 இற்கான கிரயமொன்று மேற்கொண்டிருந்த போதிலும், அது 06 வருட காலம் முதல் வர்த்தக நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | 2019 ஆண்டு முதல் 2023.09.14 திகதி வரை இந்த தேயிலை விற்பனை நிலையம் ஹன்தான தோட்டத் தொகுதியினால் நடாத்தப்பட்டு வந்ததுடன், 2023.09.15 திகதி முதல் அது குத்தகைக்கு கொடுப்பதற்காக தலைமை அலுவலகத்தினால் குத்தகையாளர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த குத்தகையாளர் அந்த தேயிலை விற்பனை நிலையத்தை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் அந்த குத்தகை உடன்படிக்கைக்குரிய பணம் நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. 2019 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை தேயிலை விற்பனை நிலையத்தை நடாத்தியதன் மூலம் வருமானம் என ரூபா 100,000 தொகை மாத்திரம் 2022 ஆண்டில் ஹன்தான தோட்டத் தொகுதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த தேயிலை விற்பனை நிலையம் தொடர்பான தகவல்கள் தோட்டத் தொகுதியில் இருந்து தொடர்ச்சியாக வினவிய போதிலும், அதற்கு முறையான பதிலேதும் வழங்கியிருக்கவில்லை. | விளைவற்ற சொத்துக்களை ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் படி சபை நிறுவப்பட்ட குறிக்கோளின் படி விவசாயம் சார், உற்பத்தி, தோட்ட முகாமைத்துவம், வர்த்தகம், நிதி மற்றும் செயற்பாடு ஆகிய துறைகளுக்குரிய நிறுவப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் கருமங்கள் ஆக்கபூர்வமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு சபைக்கு முடியாமல் இருந்தது. மேலும், சபையின் குறிக்கோளின் படி சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த விவசாயம் சார் மற்றும் தோட்ட காணிகளின் ஆக்கபூர்வ தன்மையை உச்சமட்டத்தில் அதிகரிப்பதற்கு முறையான திட்டங்கள் தயாரிப்பதற்கு முறையான நடவடிக்கை எடுத்திருக்காததுடன், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொகுதிகளில் முறையான முகாமைத்துவத்துடன் இலாபகரத் தன்மையுடன் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 2.4 இன் மூலம் சபை மறுசீரமைக்கப்பட வேண்டும் என பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2025 ஜுலை 22 திகதி வரையும் அவ்வாறான மறுசீரமைப்பொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்களுடன் இணங்கப்படுகின்றது. | சட்டத்தின் பிரகாரம் சபையின் குறிக்கோள்கள் மற்றும் கருமங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் மறுசீரமைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ஹன்தான தோட்டத் தொகுதிக்கு சொந்தமான 01 ஏக்கர் 1.3 பர்சஸில் அமைந்துள்ள தேயிலை தொழிற்சாலை மற்றும் காணி 2001 ஜனவரி 01 திகதி முதல் 30 வருடங்களுக்காக தேயிலை சபைக்கு குத்தகைக்கு | இந்த ஹன்தான தோட்டத் தொகுதி அமைந்துள்ள தொழிற்சாலையின் குத்தகை தொடர்பான விபரங்கள் எழுத்துமூலம் கணக்குப் பிரிவிற்கு இதுவரை கிடைத்திருக்காததுடன், இது தொடர்பாக உரிய தகவல்கள் காணிப் பிரிவிலிருந்து | உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்தற்கு மற்றும் சபைக்குரிய தொழிற்சாலையை தனியார் பிரிவிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கொடுக்கப்பட்டிருந்தது. சபையினால் நிதி நெருக்கடிக்காக 2003 ஆண்டின் போது ரூபா 25,000,000 தொகை 2020 ஆண்டின் போது 10,000,000 இற்கான தொகையொன்று தற்காலிக கடன் தொகையென தேயிலை சபையிலிருந்து பெற்றுக்கொண்டிருந்ததுடன், அந்த பணத்தில் ரூபா 1,000,000 தொகையொன்றும் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் கடன் தொகையை தீர்ப்பதற்கு சபைக்கு முடியாமையால் ஹன்தான தேயிலைத் தொழிற்சாலை மற்றும் காணியை தேயிலை சபைக்கு உரித்தாக்குவதற்கு சபையில் 2020 பெப்ரவரி 27 திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபை கூட்டத்தின் தீர்மானத்தின் படி இணங்கியிருந்த போதிலும், ஆதனங்களை உரித்தாக்கும் அலுவல்கள் அல்லது குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் தேயிலை சபையிலிருந்து நிலுவை குத்தகை தொகையை அறவீடு செய்யும் அலுவல்கள் 2025 ஜூலை 22 அளவிலும் மேற்கொண்டிருக்கவில்லை. மேலும், 2025 ஜூலை 04 திகதி தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது தனியார் நிறுவனம் ஒன்றினால அந்த தொழிற்சாலை தேயிலை நூதனசாலை ஒன்றாக நடாத்திச் செல்வதுடன், சபைக்கு அல்லது இலங்கை தேயிலை சபைக்கு எதுவித நலனும் கிடைத்திருக்கவில்லை. | பெற்றுக்கொண்டு எதிர் காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் அங்கீகாரம் இன்றி வழங்கப்படல் தொடர்பாக விடயங்களை கண்டறிந்து விசாரணையொன்று மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | சபை மற்றும் லூல்கந்துர தோட்டத் தொகுதிக்கு எரிபொருள் களஞ்சியப்படுத்தும் தொட்டியொன்று கொள்வனவு செய்வதற்காக 2022 செப்தம்பர் 28 திகதி ரூபா 1,613,000 தொகைக்கான முற்பணமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், | இந்த தொட்டி தொடர்பான கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், 2025 ஆண்டில் இது தொடர்பாக விபரங்கள் கண்டறிந்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | எரிபொருள் தொட்டி பொருத்துவற்கு நடவடிக்கை எடுக்காமையால் இந்த செலுத்தப்பட்டிருந்த முற்பணத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கு அல்லது அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த |

| | | | |
|---|---|---|---|
| | 2025 ஜூலை 22 திகதி அளவிலும் எரிபொருள் தொட்டு கொள்வனவு செய்து நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் படி மாற்றுக் காணிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் காணப்படாத போதிலும், 2019 ஜூலை 23 திகதிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையின் பென்ரீன் தோட்டத்தின் 22 ஏக்கர் 00 ரூட் 30.08 பர்சஸ் இற்கான எண்ணிக்கைக்கு மாற்றுக் காணிகளாக இரண்டு நபர்களுக்கு ஹன்தான உடுவெல தோட்டத் தொகுதியிலிருந்து காணி வழங்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் 2020 ஜூலை 31 திகதி இந்தக் காணியின் உரிமையை ரூபா 101,109 தொகை போன்ற குறைந்த பெறுமதிக்கு குறிப்பிட்ட இரண்டு நபர்களுக்கும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் உரித்தாக்கப்பட்டிருந்தது. மேலும், விற்பனை உடன்படிக்கை இலக்கம் 5792 இன் மூலம் இந்தக் காணியின் உரிமையாளரினால் 2020 திசெம்பர் 11 திகதி குறிப்பிட்ட காணியை ஆதன விற்பனை கம்பனி ஒன்றிற்கு (Land Sale) ரூபா 159,753,600 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அது பின்னர் ஹோட்டல் ஒன்றிற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு 2025 ஜூலை 22 திகதி அளவிலும் விற்பனை செய்யப்பட்டிருந்தது. | சந்தகிரி லக்ஷ்மன் வீரரத்ன மற்றும் இந்திக திஸ்ஸ வீரரத்ன ஆகிய நபர்களுக்கு கொழும்பு மாவட்டத்தில் ஹென்ரின் தோட்டத் தொகுதி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் வழங்கியிருந்த 22 ஏக்கர் 30.02 பர்சஸ் காணி எண்ணிக்கை விடுவிப்பதற்காக புஸல்லாவ பெருந்தோட்ட கம்பனி நடவடிக்கை எடுக்காமையால் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் அதற்கு மாற்று ஒன்றாக உடுவெல தோட்டத் தொகுதியில் இருந்து 22 ஏக்கர் 30.08 பர்சஸ் வழங்கும் படி வேண்டப்பட்டது. அதன்படி, அந்தக் கோரிக்கை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது. அதன்படி, இந்தக் கோரிக்கைக்கு இந்தக் காணிப் பகுதி வழங்குவதற்கான அங்கீகாரம் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணியின் பெறுமதி தொடர்பாக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை எதுவித தீர்மானமும் எடுத்திருக்காததுடன், அதற்காக தலையீடு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மேற்கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது எனவும், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் மேற்கூறிய நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காணி உறுதியின் மீது பின்னர் இந்தக் காணிக்கான உறுதி எழுதப்பட்டுள்ளது என குறிப்பிடப்படுகின்றது. | விவசாயம் சார் அபிவிருத்திக்காக சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள காணிகளில் இருந்து மாற்றுக் காணிகள் வழங்குவதற்கு சபையின் அங்கீகாரம் வழங்குதல் மற்றும் இது தொடர்பாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் காணி உறுதிகள் வழங்கல் தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | 2007 நவம்பர் மாதம் முதல் நாகஸ்தென்ன தோட்டத் தொகுதி தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்காக | 2007 ஆண்டின் போது நாகஸ்தென்ன தோட்டத் தொகுதியின் நிர்வாகம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் குவின்ரிஷ் எக்ரோ தனியார் | சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை பெறுமதி மதிப்பீடு செய்து குத்தகையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாவதற்கு முன்னர் தோட்டத் தொகுதியில் 120 மரங்கள் அந்தக் கம்பனியினால் அங்கீகாரம் இன்றி வெட்டி அகற்றப்பட்ட காரணத்தினால் அந்த தோட்டத் தொகுதி மீண்டும் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது. அந்த மரங்களின் நட்டத்தை அறவீடு செய்வதற்காக 2008 மே மாதம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த நட்டத்தை பெறுமதி மதிப்பீடு செய்து அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், வழக்கு அலுவல்களும் இரு தரப்பினர்களும் இணக்கப்பாட்டுடன் நட்டஈடு ஏதும் பெற்றுக்கொள்ளாமல் 2009 திசெம்பர் 28 திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தது. | கம்பனியுடன் இணைந்து நிறுவப்பட்டிருந்த சிலோன் யுனைடட் பிலான்டேஷன் லிமிடட் ஆரம்பிப்பதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைத்தாச்சிடப்பட்டிருந்ததுடன், குவின்ரிஷ் எக்ரோ தனியார் கம்பனியினால் ரூபா 30 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பணம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் நாகஸ்தென்ன தோட்டத் தொகுதியின் நிலுவை நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் தோட்டத் தொகுதியின் நிர்வாகம் சிலோன் யுனைடட் பிலான்டேஷன் பிரைவட் லிமிடட் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அங்கு நாகஸ்கந்த தோட்டத் தொகுதியில் காணப்பட்ட 120 வாணிபப் பெறுமதியுள்ள மரங்கள் வெட்டப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 11,200,000 தொகையொன்று நட்டமொன்று தோட்டத் தொகுதிக்கு ஏற்பட்டிருந்ததென அப்போதைய பெருந்தோட்ட முகாமையாளரினால் கூற்றொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் மரங்களின் பெறுமதி ரூபா 7,529,688 இற்கான பெறுமதியின் மீது அந்த மரம் வெட்டுவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த B-2683/08 இலக்கம் கொண்ட வழக்கு இணக்கமடைந்திருந்தது. அந்தப் பெறுமதி மாவட்ட வன உத்தியோகத்தரினால் 2008.08.12 திகதி பெற்றுக்கொள்ளப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரதியொன்று என்னிடம் காணப்படவில்லை. அதன் பிரதியொன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவிக்கின்றேன். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | நாகஸ்தென்ன மற்றும் கந்தல்ஓய தோட்டத் தொகுதிகளில் முறையே ரூபா 1,539,546 தொகை மற்றும் ரூபா 1,256,046 இற்கான பணம் களவாடல் நடைபெற்று சுமார் 11 வருடங்கள் கடந்திருந்த | வழக்கு இலக்கம் HC 223/20 இன் கீழ் கண்டி உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடரந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. 2025.12.11 திகதி மீண்டும் | நிதிப் பிரமாணம் 104(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு அலுவல்களின் தற்போதைய நிலைமையை கண்டறிந்திருக்காததுடன், பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் வழக்கு அலுவல்கள் காணப்படுவதனால் நட்டத்தை அறவீடு செய்வதற்கு முடியாமல் உள்ளது. நீதிமன்றத் தீர்ப்பின் படி படி நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) | மீளாய்வாண்டின் நடைமுறை வேலை மீதியில் அடங்கியுள்ள தற்போது செயற்பாடு நிலைமையில் காணப்படாத விசேட செயற்திட்டங்கள் மற்றும் குடிநீர் செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 753,449 இற்கான செலவு சிக்கனமற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | குடிநீர் போத்தல் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட செலவு சிக்கனமற்ற செலவொன்று என்பது உண்மையாகும். இந்த செயற்திட்டம் தற்போது செயற்படவில்லை என தோட்ட அத்தியட்சகரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | திட்டமொன்று இன்றி செயற்திட்டங்கள் செயற்படுத்தக்கூடாது. |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வொக்ஷொல் வீதியில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 02 களஞ்சியங்கள் போட்டி அடிப்படையில் கூறுவிலை அழைக்கப்படாமல் 2005 ஆண்டின் போது 30 வருடங்களுக்காக ரூபா 105,000 இற்கான மாதாந்த குத்தகைத் தொகைக்கு தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த குத்தகை உடன்படிக்கை நிபந்தனையின் படி பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையாகக் கொண்டு மாதாந்த குத்தகை செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. மாதாந்த பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியின் அதிகரிப்பு ரூபா 95,000 வீதம் 49 தவணைகளுக்காக ரூபா 4,655,000 தொகை மற்றும் ரூபா 175,000 வீதம் 14 மாதாந்த தவணைகளுக்காக ரூபா 2,450,000 தொகை குத்தகைக்கு கொடுக்கப்பட்ட 2005 திசெம்பர் முதல் 2011 பெப்ரவரி வரை | வொக்ஷொல் வீதியில் அமைந்து இரண்டு களஞ்சியங்கள் நிலோனா லங்கா தனியார் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தக் கட்டிடங்கள் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக போட்டி அடிப்படையில் கூறுவிலைகள் அழைத்தல் தொடர்பான தகவல்கள் கோப்புக்களில் காணப்படவில்லை. இந்த விடயத்துடன் தொடர்புபட்ட ஊழியர்களும் தற்போது சேவையில் காணப்படாமையால் இது தொடர்பாக கண்டறிவதற்காக இயலுமையொன்று காணப்படவில்லை. எவ்வாறாயினும், உங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 2005 முதல் 2011 வரையான காலப் பகுதிக்கான நிலுவைக் குத்தகை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். 2011 ஆண்டில் கையொப்பமிடப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டின் மீது குத்தகைத் | உடன்படிக்கையின் பிரகாரம் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும் மற்றும் உடன்படிக்கையின் பிரிவுகளை திருத்தி புதிய குத்தகை உடன்படிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

குத்தகை அதிகரிப்பின் கூட்டுப் பெறுமதி ரூபா 7,105,000 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

முதலாவது குத்தகை உடன்படிக்கை முடிவடைவதற்கு முன்னர் மீண்டும் அந்த குத்தகையாளருடன் 2011 மார்ச் மாதத்தில் ரூபா 105,000 இற்கான மாதாந்த குத்தகை பெறுமதியை செலுத்துவதற்கு பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையை கொண்டு மாதாந்த குத்தகைக்கு கொடுத்தல் என்ற பந்தியை அகற்றி 30 வருடங்களுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கு உடன்படிக்கைக்கு அணுகியிருந்தது.

இரண்டாவது குத்தகை உடன்படிக்கையின் படி பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் குத்தகை அறவீடு செய்தல் என்ற நிபந்தனை அகற்றப்பட்டிருந்தால் 2011 மார்ச் முதல் மாதாந்த பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரித்தல் ரூபா 119,000 வீதம் 58 மாதாந்த தவணைகளுக்காக ரூபா 6,902,000 தொகை மற்றும் ரூபா 353,000 தொகை வீதம் 36 மாதாந்த தவணைகளுக்காக ரூபா 12,708,000 தொகை மற்றும் ரூபா 438,000 தொகை வீதம் 48 மாதாந்த தவணைகளுக்காக ரூபா 21,024,000 தொகையாக கூட்டுத்தொகை ரூபா 40,634,000 தொகை 2011 மார்ச் முதல் 2022 திசெம்பர் வரை பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி அறவிடப்பட வேண்டிய குத்தகை வருமானம் ஒன்றினை சபை இழந்திருந்தது.

தொகையை திருத்துவதற்கு முடியாமல் போனமையால் இந்த நட்டம் சபைக்கு ஏற்பட்டிருந்ததென ஏற்றுக்கொள்வதுடன், புதிய உடன்படிக்கையொன்று கையொப்பமிடுவதற்காக கலந்துரையாடப்பட்ட போதிலும், இலையபெரும தரப்பினருடன் காணப்பட்ட வழக்குக்காக வழங்கியிருந்த வழக்குத் தீர்ப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்தக் காணியில் மாடி கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படாமை இதற்கு பாதகமாக இருந்தது.